அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி


# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு ஆவணி-புரட்டாசி செப்டம்பர் 2016 முரசு 10 ஒலி 111



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# 5-10-2016 வள்ளல் பெருமானார் வருவிக்கவுற்ற தினம்

## சத்குரு தோத்திரம்

அறிபவை எல்லாம் அறிவித்து என்னுள்ளே
பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே
போற்றி நின்அருள் போற்றி நின்பொது
போற்றி நின்புகழ் போற்றி நின்உரு
போற்றி நின்இயல் போற்றி நின்நிலை
போற்றி நின்நெறி போற்றி நின்மொழி
போற்றி நின்செயல் போற்றி நின்குணம்
போற்றி நின்முடி போற்றி நின்நடு
போற்றி நின்அடி போற்றி போற்றியே.



# திருச்செவிக்கு விண்ணப்பம்

மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேன் பொய்யறிவாற் புனைந்துரைத்த பொய்யுரைகளையும் மெய்யுரைகளாகக் கருணையினாற் கடைக்கணித் தருளிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீரது திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் கருணைப் பெருந்தன்மையைக் கருதுதற்கு விரும்பிய ஐந்தொழிற் கருத்தர் முதலியோர் தூய்மையுடைமை, அன்புடைமை முதலிய சுபகுணங்களைக் கருதுதற் கருவியாய தமது கரணங்கள் முற்றுப்பெற்றில வென்று கருதுதலின்றி எண்ணி எண்ணி இரங்குகின்றனர் என்று அறிவுடையோர் வியந்துரைத்தலைப் பலகாற் பயின்று கேட்டறிந்தேன். இங்ஙனம் கேட்டறிந்த சிறியரிற் சிறியேன் அத்திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் காமம், வெகுளி முதலிய அவகுணங்கட்கெல்லாம் வைப்பிடமாகிய பராய்முருட்டன்ன கருங்கற் கரணத்தால் எங்ஙனம் கருதத்தொடங்குவேன்!

நாயிற் கடையேன் செய்த குற்றங்களை யெல்லாம் குணங்களாகக் கொண்டு என்னுள்ளகத்தே யமர்ந்து உயிரிற் கலந்த பெருங்கருணைப் பெருமானே! தேவரீரது திருவருட் சமுகத்தின், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தற்கு விரும்பிய மூர்த்திகள் முதலியோர் துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நாவுறுப்புக்கள் வாய்மைகூறல் இன்சொற்புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றில வென்று துதித்தலின்றி அச்சுற்று நிற்கின்றன ரென்று அறிஞருண்மை வாசகத்தாலறிந்தேன். இங்ஙன மறிந்த கடையேன் பொய்யுரைத்தல் பயனில கூறல் முதலிய தீமைக்கட்பயின்று தடித்த எனது அசுத்த நாவினால் தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்குணப் பெரும் புகழை எங்ஙனம் துதிக்கத் தொடங்குவேன்!

*திருச்சிற்றம்பலம்*

யோக மாந்தருக்கு உரைத்த

# அனுபவ ஞானம்

இளந்துறவி மடாலயம் ஒன்றில் வசிந்து வந்தான். வயதான ஒரு துறவியின் அருகாமையில் தங்கியிருப்பதற்காக வந்திருந்தான் அவன். ஆனால் ஒரு சில தினங்களுக்குள்ளாகவே முதிய துறவிக்கு ஒன்றுமே தெரியாது என்பதாய் நினைத்தான் அவன். தினமும் ஒரே சமாச்சாரத்தைக் கேட்பதாய் பட்டது அவனுக்கு. ஆகவே வெறுத்துப் போனான் அவன். அந்த மடாலயத்தை விட்டுக் கிளம்பி வெறியேறி ஒரு நல்ல குருவை வேறெங்காவது தேடி அமைத்துக் கொள்ள வேண்டும் என நினைத்தான் அவன்.



அவன் கிளம்பும் நாளும் நெருங்கியது. அந்நேரத்தில் அந்த மடலாயத்துக்கு வேறோரு துறவி வந்தான். அன்றைய இரவில் மடலாயத்தில் தங்கியிருந்த அனைவரும் ஒன்றுகூடி பல விஷயங்கள் பற்றி பேசினார்கள். அப்புதுத் துறவி பற்பல சமாசாரங்களை அறிந்து வைத்திருந்தார். நுணுக்கமாயும், அறிவுப்பூர்வமாயும் அவர் பேசினார். மிகவும் ஆழமாகவும் உச்ச வேகத்துடனும் விளக்கினார். குரு என்று ஒருவர் அமைந்தால் அவர் இப்படித்தான் அமைய வேண்டும் என நினைத்தான் அந்த இளந்துறவி. இரண்டு மணிநேரங்களுக்குள் அங்கிருந்த அனைவரையும் வசியம் செய்ததைப்போல தன்பால் ஈர்த்திருந்தார் அப்புதுத் துறவி. முதிய துறவி தற்போது ஊக்கம் குன்றி சோர்ந்திருக்க வேண்டும் என எண்ணினான் இளந்துறவி. சின்னவனாய் இருந்தாலும் மணிக்கணக்காய் என்னமாய் பேசிவிட்டான்... தனக்கு இத்தனை வயதாகியும் எதையும் படிக்காமலே விட்டு விட்டோமே எனும் வலி அந்த முதியவருக்கு உண்டாகியிருக்கும் எனக் கருதினான்.

இரண்டு மணிநேரங்கள் கடந்து, உரையாடல்கள் எல்லாம் முடிந்த பிறகு, புதுத்துறவி அந்த முதிர்ந்த துறவியை பார்த்து என் பேச்சுக்கள் எப்படியிருந்தன? பிடித்ததா? என கேட்டான்.

“என் பேச்சுக்களா?” என கேட்டார் அந்த முதியவர், முதிர்ந்தவர். “நீ பேசினாய். ஆனால் பேசியவற்றில் எதுவுமே உன்னுடைய சொந்த உரை கிடையாதே. நீயாய் ஏதாவது முன் வைப்பாய் என நானும் கூர்மையாய் கவனித்துக் கொண்டே தானிருந்தேன். ஆனால் நீ கடைசி வரை நீயாய் எதுவுமே சொல்லவில்லை.”

புதுத்துறவி இதற்கு பதிலளித்தான்: "நானாய் பேசவில்லையா? நான் பேசாவிட்டால், கடந்த இரண்டு மணிநேரங்களாய் அங்கு பேசிக் கொண்டிருந்தது யாராம்?"

குரு ஸ்தானத்து துறவி பேசினார்: "என்னுடைய நேர்மையான மற்றும் உறுதியான கருத்தைக் கேட்கிறாய். சொல்கிறேன். புத்தகங்களும், இதிகாச புராணங்களும் உன்னுள்ளிருந்து பேசின. ஆனால் நீ பேசவேயில்லை. நீ ஒரேயொரு வார்த்தையைகூட பேசவில்லை. நீ சேமித்து வைத்துள்ளவற்றை தூக்கியெறிந்தாய். நீ சேகரித்தவற்றை அப்படியே வாந்தியெடுத்தாய். நீ இடைவிடாது வாந்தியெடுத்தபடியே இருந்ததால், ஒருவேளை நீயொரு தீவிர நோயாளியோ என நான் பயப்பட்டேன். உன் வயிற்றுக்குள் – அதாவது புத்திக்குள் – என்னவெல்லாம் நீ திரட்டி வைத்திருந்தாயோ அவை அனைத்தையும் நீ இரண்டு மணிநேரங்களாய் வாந்தியெடுத்துக் கொட்டி விட்டாய். அதன் அசுத்தம் மற்றும் துர்நாற்றத்தால் நீ இந்த அறையையே நிறைத்துள்ளாய். ஞானம் என்பதன் துளியத்தனை சுகந்தத்தைக்கூட என்னால் நுகர முடியவில்லை. ஏனென்றால் வெளியிலிருந்து உட்கொள்ளப்பட்டு பிறகு அப்படியே அது வெளியில் கொட்டப்படும்போது, அது வாந்தியின் குணத்தைக் கொண்டு மாமிச வாடைதான் அடிக்கும். நீ உன்னிலிருந்து ஒன்றுகூட பேசவில்லை - நீ பேசியவற்றில் ஒரேயொரு வார்த்தைகூட உனது சொந்த வார்த்தை அல்ல."

முதிர்ந்த குரு பேசக் கேட்டதும், மடாலயத்தை விட்டு வெளியேற இருந்த இளந்துறவி தொடர்ந்து அங்கேயே நீடிக்கும் முடிவினை எடுத்தான். அந்நாளில், அவனது வாழ்க்கையிலேயே முதல்முறையாக, ஞானம் என்பதில் பலவகைகள் உள்ளன என்பதை அவன் பிரித்தறிந்தான்.

ஆம் அன்பர்களே. இக்கதையில் வரும் புதுத்துறவிபோல அனேக அன்பர்கள் தாங்கள் படித்ததை வைத்துக் கொண்டு எந்த அனுபவமும் பெறாமல் வாந்தி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மகான்கள் அருளிய நூல்களில் உள்ள வார்த்தைகள் எல்லாம் அவரவர்களது அனுபவ உண்மைகள். அந்த அனுபவத்தை சாதனையால்தான் பெறமுடியுமேயன்றி படிப்பறிவினால் பெற இயலாது.

மகான்களின் அனுபவம் என்னவென்பதை உணர்ந்து கொள்ள ஆரம்பத்தில் அந்நூல்களைப் படிப்பது முக்கியம்தான். ஆனால் படிப்பதால் மட்டுமே ஞானம் வந்துவிடாது. இதை நம் வள்ளல் பெருமானார் உரைநடை பகுதியில் தெளிவாக விளக்குகின்றார்.

ஞானம் அபரஞானம் பரஞானமென இரண்டு அபரஞானமென்பது முன், சாத்திர்ஞானம் அல்லது விசாரஞானம், வாசா கயிங்கரியம், சாதனம், வாச்சியார்த்தம். பரஞானமென்பது பின், அனுபவ ஞானம், சாத்தியம், லக்ஷியார்த்தம். மேலும் அபரம் முன், பரம் பின் சாத்திரம் முன், அனுபவம் பின்; சாதனம் முன், சாத்தியம் பின், ஆதி முதல், அந்தம்–கடை, அநாதி –ஆதி அந்த மில்லாதது.

மேலும், ஞானமென்பது மூன்று வகைப்படும். அவை உபாயஞானம், உண்மை ஞானம், அனுபவஞானம். இவற்றின் தாத்பரியம்: நக்ஷத்திரப்பிரகாசம் போல் தோன்றி அறியும் ஆன்மஅறிவே உண்மைஞானம்; எல்லா வஸ்துக்களையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுளறிவே அனுபவஞானம். ஒரு வஸ்துவை அதன் நாமரூபமின்றிக் காண்பது இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு; கூடமாக அறிதல் கரணக்காட்சி, கரண அறிவு; இன்னதென்று தெரிதல் ஜீவக்காட்சி, ஜீவஅறிவு எதையுந் தானாக அறிதல் ஆன்மக்காட்சி, ஆன்மஅறிவு.

இஃது உண்மையாய் இருக்க அவ்வனுபவ ஞானத்தை பெறுவதற்கான வழி என்னஎன்பதைக் காண்போம்.

இதற்கு முதலில் அவ்வனுபவம் எத்தகையது என்பதை தெரிந்து கொள்வோம்.

ஒரு ஆன்மிக கவிஞர் பாட்டு பாடுவதுண்டு. மிக அழகான பாட்டு. ஒரு நகரம் விட்டு மறுநகரம் போய் இப்பாடலை அவர் பாடுவார். கடவுளைப் பற்றி சொல்லுமாறு அவரிடம் மக்கள் கேட்கும்போதெல்லாம் இந்தப் பாடலை அவர் பாடுவார். மிக அற்புதமான பாடலது.

அந்தப் பாடலில் அவர் சொல்வார்.

காதலன் ஒருவன், தான் நேசிக்கும் நபருடைய வாசலுக்குப் போய் கதவைத் தட்டினான். நேசிப்பவர் கேட்டார்: "யாரது?"

காதலன் சொன்னான் - எல்லா காதலர்களும் இதையே சொல்வார்கள் - நான் உன்னுடைய காதலன். உள்ளே அமைதி. எந்த பதிலும் வரவில்லை. எந்த குரலும் உள்ளேயிருந்து கேட்கவில்லை.

காதலன், கதவை படபடவென்று தட்ட ஆரம்பித்தான். ஆனால் உள்ளே ஒருவரும் இல்லாததைப் போலவே இருந்தது - வெறும் அமைதி. அவன் கத்த ஆரம்பித்தான்:"எதற்காக மவுனம்? எனக்கு பதில் கொடு! நான் உன் காதலன். நான் வந்திருக்கிறேன்." அவன் கத்திக்கத்தி "நான் வந்து விட்டேன். நான் உன் காதலன் வந்துள்ளேன்" என்று சொல்லச்சொல்ல, உள்ளே மயானத்தின் அமைதியே அதிகரித்தது. உள்ளேயிருந்து பதிலே இல்லை.

பிறகு அவன் தனது தலையை கதவில் முட்டிக்கொண்டு கத்தினான்: "ஒரு முறையாவது பதில் கொடு!"

அப்போது உள்ளேயிருந்து ஒரு பதில் வந்தது: "இந்த வீட்டில் இருவருக்கு இடம் இருக்க முடியாது. 'நான் உன் காதலன். நான் வந்திருக்கிறேன்' என்கிறாய் நீ - ஆனால் ஏற்கெனவே 'நான்' இங்கிருக்கிறேன். இருவருக்கு இங்கு இடம் கிடையாது. நான் என்பதை உதிர்த்து விட்டு வருபவருக்கு மட்டும்தான் அன்பின் நுழைவாயில் திறக்கும். இப்போது போ மற்றொரு சமயத்தில், வா."

காதலன் சென்று விடுகிறான். அவன் பல வருடங்களாய் பிராத்தனையிலும், தியானத்திலும் இருந்தான். பல பவுர்ணமிகள் கழிந்தன. பல சூரியோதயங்களும்,

சூரிய அஸ்தமனங்களும் கடந்தன. பிறகு அவன் மீண்டும் நுழைவாயிலுக்கு திரும்பி வந்தான். அவன் கதவைத் தட்டியபோது மறுபடியும் அதே கேள்வியையே கேட்டாள்: "யாரது?" இம்முறை காதலன் சொன்னான்: இப்போது 'நான்' கிடையாது இருப்பது நீ மட்டுமே."

அந்த கணத்தில் நுழைவாயிலின் கதவு திறந்து கொண்டதாய் சொல்கிறார் குரு.

ஆனால், நம் மகான்கள் கதவினைத் திறந்திருக்க மாட்டார்கள். அந்த கவிஞர் பல வருடங்களுக்கு முன்னால் காலமாகி விட்டார். ஆகவே கதவினைத் திறக்க இது சிறந்த தருணம் கிடையாது என்று அவர் தெரிந்தும் கொள்ள முடியாமல் போய்விட்டது. சீக்கிரத்திலேயே கதவினை திறக்க அவர் அனுமதித்து விட்டார் - ஏனென்றால், ஒருவன் "இருப்பது நீ மட்டுமே" என்று சொல்லும்போது இன்னமும் அவன் தன்னை "நான்" என உணர்ந்து கொண்டுதானிருக்கிறான். எவனொருவன் "நீ" என்பதை உணராமல் இருக்கிறானோ, அவனால்தான் தன்னுள் "நான்" என்பதையும் அனுபவிக்காமல் இருக்கமுடியும்.

ஆக, அன்புக்கு இருமை கிடையாது என்று சொல்வது தப்பானாலும்கூட, அன்பு ஒருமையானது என்று சொல்வதும் இதற்கு இணையானதொரு தவறுதான். அன்பில் இருமையும் கிடையாது, ஒருமையும் இல்லை. ஒன்று இருக்கிறது என்ற உணர்தல் இருந்தால், நினைவிருக்கட்டும்... இரண்டும் அங்குண்டு. உள்ளம் என்பது ஒன்று - அதில் இரண்டு உண்டல்லவா. எங்கு 'நீ' உள்ளதோ, அங்கு நானும் உண்டு.

ஆகவே நம் ஞானிகள் அந்த காதலனை மறுபடியும் விரட்டி அனுப்பியிருப்பார்கள். அவன், இப்போது "நான் கிடையாது இருப்பது நீ மட்டுமே" என்று சொன்னான் - அவன் ஓர் உபாயம் செய்து இப்படிச் சொல்லியிருக்கிறான். இது அவன் செய்த ஒரு தந்திரம். முதலில், "நான்" என்று பதிலளித்தான். அப்போது கதவுகள் மூடிக்கிடந்தன. பிறகு பல வருடங்கள் ஆழ்ந்து சிந்தித்த பிறகு "நான் கிடையாது, நீ மட்டுமே" என சொல்ல முடிவெடுத்தான். ஆனால் இப்படிச் சொல்வது யார்? சொல்வது 'நான்'. ஏன் இப்படி அவன் சொல்ல வேண்டும்? யாருக்கு 'நீ' தெரியுமோ, அவனுக்கு 'நான்' என்பதும் தெரியும்.

"நீ" என்பது "நான்" என்பதன் நிழல் என அறிக. யாருக்கு அவருடைய "நான்" மறைந்து விடுகின்றதோ அவருக்கு "நீ" என்பதும் இருக்காது.

அக்காதலி விரும்பியவர் இருவருக்கு இடம் கிடையாது என்று சொல்லியிருப்பதால், அவனைத் திருப்பித்தான் அனுப்பியிருக்க வேண்டும். அவனுக்கு விளங்கவில்லை: அவன் காட்டுக் கத்தலாய் கத்தியபடி, "எங்கு இரண்டு உள்ளது? இப்போது நானில்லை... நீ மட்டுமே உள்ளாய்" என்றான்.

இதற்கு, அவன் மனம் கவர்ந்தவர், அந்தக் காதலனை திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். அவன் கற்று வந்திருப்பது ஒரு தந்திரம். அவன்

இன்னமும் இருவரைத்தான் பார்க்கிறான். இருவர் இருக்கும் மனவீட்டில் அன்பிருக்க முடியாது.

முடிவு இப்படித்தான் இருக்க வேண்டும்: காதலன் திரும்பிப் போய் விட்டான். காலங்கள் கடந்தன. அவன் திரும்பி வரவில்லை. அவன் வரவேயில்லை. பிறகு உள்ளேயிருந்த அவனுடைய மனம் கவர்ந்தவர் அவனைத் தேடிக் கொண்டு கிளம்புகிறார்.

ஆகவே, உங்களுடைய "நான்" எனும் மமதையின் நிழல் மறைந்துவிடும் தினத்தன்று, "நான்" அல்லது "நீ" ஆகிய இரண்டுமே மிச்சமில்லாமல் கரைந்து விடும் நாளன்று, நீங்கள் இறைமையைத் தேடிக் கொண்டு போக வேண்டியதில்லை இறைமையே உங்களை நோக்கி ஓடோடி வரும்.

நம் வள்ளல் பெருந்தகை "தியானம்" என்ற தலைப்பில் அருளியதாவது.

தியானஞ் செய்யவேண்டுமானால், ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்கவேண்டும். நிஷ்களமா யிருக்கப்படாது; உருவமாக இருக்க வேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின், உருவங் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில், பார்க்கும் தான் கெடுவது அத்வைதம். பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதீதம். சத்தியம்.

இவ்விதம் பாமரருக்கும் விளங்கும் வண்ணம் எளிமையாக அருளியதோடு மட்டுமல்லாமல். இந்த தேகத்தில் புருவமத்தியில், நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்தில், கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப்பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து, அருட்பெருஞ்ஜோதி மந்திரம் சேர்கவும். அருட்பெருங்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி என்ற மகாமந்திரத் திருவாக்கியத்தை செய்தல் வேண்டும் என தியானம் செய்யும் முறையையும் பட்ட பகல்போல் வெட்ட வெளிச்சமாக தெளிவுபடுத்துகின்றார் நம் பெருமானார். மேலும் இதற்கு ஆதாரமான ஜீவகாருண்ய ஒழுக்கமும் இருக்க வேண்டும் என்கிறார். ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் தியானம் செய்தால் பலன் கிட்டாது எனவும் சத்தியம் செய்து கூறுகின்றார்.

**மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறிக் கேள்வி**
**மீதேறித் தெளிந்திச்சை விடுதல் ஏறி**
**அஞ்ஞான மற்றபடி ஏறி உண்மை**
**அறிந்தபடி நிலைஏறி அதுநான் என்னும்**
**கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற எல்லாம்**
**கடந்தேறி மவுனவியற் கதியில்ஏறி**
**எஞ்ஞானம் அறித்தெளிந்தோர் கண்டுங் காணோம்**
**என்கின்ற அநுபவமே இன்பத் தேவே. – மகாதேவமாலை 50**

இத்திருஅருட்பா பாடலின் அனுபவமே ஒரு சாதகனின் உண்மை அனுபவமாகும்.

# தத்துவ விளக்கம்

## பாற்கடலில் பள்ளி கொண்டது



உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பையுண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் (2 மணிநேரத்தில்) பால் போன்ற ஜலமாய் ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கிறது. அதை பாற்கடல் என்று சொல்லுகின்றது. அந்தப் பையிலிருந்து பால் போன்ற ஜலத்தின் மேல் ஆலிலை வடிவையுடைய வயிற்றின் உட்பாகம் படிவதனால் அதே வண்ணமாக ஓராடை கட்டியிருக்கும். அதை ஆலிலை என்று சொல்லுகின்றது. அந்த ஆடையின் மேல் ஒரு நரம்பு வட்டமாய்த் தலைதூக்கி இருக்கின்றது. அதை சேஷனென்று சொல்லுகின்றது. அந்த குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்பு போன்ற பச்சை மேனியாய் ஒரு சத்தி உண்டு. அதை விஷ்ணுவென்று சொல்லுகின்றது.

அச்சத்தியில் முன் பின் நடுவென்னும் இடத்தில் அதன் காரணச் சத்து பொன் வண்ணமாயும், ருத்திர வண்ணமாயும், குங்கும வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றை சீதேவி, பூதேவி, நீளாதேவி எனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தி இருப்பதால் விஷ்ணு மார்பில் லஷ்மியை வைத்தாரென்பது. இதுதான் திருப்பாற்கடல் தத்துவ விளக்கம்.

– திருஅருட்பா வசனபாகம்

# திருமந்திரம்



**இளைக்கின்றவாறு அறி இன்னுயிர் வைத்த**
**கிளைக்கு ஒன்றும் ஈசனைக் கேடு இல் புகழோன்**
**தளைக் கொண்ட நாகம் அஞ்சு ஆடல் ஒடுக்க,**
**துளைக்கொண்டது அவ்வழி தூங்கும் பெடைத்தே. – புலனடக்குக; சிவானந்தம் பெறுக**

தான் பிறந்து பிறந்து எய்க்கின்றமையை உணர்பவனும், புகழுடையவனும் ஆகிய யோகி, தன்னை அடியார் கூட்டத்தில் இணைத்துக் கொண்டு, அவ்வடியார்களுடன் ஒன்றி நிற்கும் இறைவனைச் சேர்ந்திடக் கருதி, ஐம்புலன்களின் ஆட்டத்தை ஒடுக்க, அவனது உயிராற்றல், (யோக சாதனையில்) சுழுமுனை நாடியில் மேலே ஏறி, அனுபவத் தானங்களில் சிவானந்தம் பெற்று நிற்க, சிவனது நாயகியாகத் தன்னை உணர்வான்.

**ஐந்தில் ஒடுங்கில் அகல் இடம் ஆவது**
**ஐந்தில் ஒடுங்கில் அருந்தவம் ஆவது**
**ஐந்தில் ஒடுங்கில் அவன்பதம் ஆவது**
**ஐந்தில் ஒடுங்கில் அருள் உடையாரே. – புலன் அடக்கம்**

ஐந்து புலன்களும் ஒடுங்குவது உலகத்தையே வெல்வதாகும். அஃது அரிய தவமும் ஆகும். அதன்பயனாக, இறைவன் திருவடியை அடையலாம். அவனது அருளுக்கு உரியவர் ஆகலாம்.

**போற்றிசைத்தும் புனிதன் திருமேனியே**
**போற்றிசெய்; மீண்டே புலன் ஐந்தும் புத்தி ஆம்;**
**நால் – திசைக்கும், பின்னை, ஆற்றுக்கும் நாதனை**
**ஊற்றுகை உள்ளத்து ஒருங்கலும் ஆமே. – இறைவனைப் போற்று, புலன் அடங்கும்**

எதையேனும் போற்றாது, இறைவனது திருமேனியையே போற்றுக. அவ்வாறு செய்யின் ஐம்புலன்களும் விடயங்களைப் பற்றாமல், புத்திக்கு அடங்கும். பின்பு, தலையின் நான்கு பக்கங்களிலும் வீற்றிருந்து அனுபவம் தருவோனும், சுழுமுனை வழிக்குத் தலைவனுமாகிய இறைவனை உள்ளத்தில் நிறுத்தி, அவனோடு ஒன்றி, சிவானந்தம் பெறலாம்.

**உற்றிடும் ஐமலம் பாசம் உணர்வினால்**
**பற்று அற நாதன் அடியில் பணிதலால்**
**சுற்றிய பேதம் துரியம் மூன்றால் வாட்டி,**
**தற்பரம், மேவுவோன் சாதகனாமே. – உண்மைச் சாதகன்**

ஆன்மாவின் பாசம் காரணமாக அதன் உணர்வில் மலங்கள், ஆட்சி செய்யும். ஆனால் ஆன்மா இறைவனது திருவடியில் வணங்கி, அடக்கமாக வாழ்ந்தால் அதன்பற்றுக்கள் நீங்கும். பிறகு, மேல்நிலையில் இறைவன் வேறு, தான் வேறு என்று ஆன்மா உணரும் வேறுபாட்டு உணர்வை, சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற மூன்று அவத்தைகளின் அனுபவத்தால் நீக்கிக் கொண்டு தானேசிவம் ஆகும். இத்தகையவனே தனது ஆன்மீகப் பயிற்சியை நிறைவு செய்பவன் ஆவான்.

# மூத்தோர்சொல் அமிர்தம்

ஒரு எகிப்து நாட்டு சக்ரவர்த்திக்கு பல நாட்களாக ஒரு சந்தேகம் இருந்தது. துன்ப - இன்ப அனுபவம் எங்கிருந்து வருகின்றன? என்பதுதான் அந்த சந்தேகம்.

ஒரு சமயம் தன் நாட்டிற்கு வந்த குருவிடம் இந்த சந்தேகத்தை கேட்டான். அதற்கு அந்த குரு ஆரோக்கியமான ஒரு நபரை நாட்டிலிருந்து தேர்ந்தெடுத்து அவனை ஆறு மாதங்கள் தனிமையான ஓர் அறையில் போட்டு வைக்குமாறு சக்கரவர்த்தியைக் கேட்டுக் கொண்டார்.

இதற்கான தெரிவு நகரத்தில் நடைபெற்றது. எல்லா வகைகளிலும் ஆரோக்கியமாய் வாழும் ஓர் இளைஞன் தெரிவானான். அவன் இளைஞன். திருமணமாகியிருந்தது. அவனுக்கு ஒரு குழந்தை உண்டு. கை நிறைய சம்பாதித்தான். சந்தோஷமாயிருந்தான். அவன் சக்கரவர்த்தியிடம் அழைத்து வரப்பட்டான். அரசர் அவனிடம் பேசினார்.

“உனக்கு நாங்கள் எவ்விதமான சங்கடங்களும் தரமாட்டோம். நாங்கள் ஒரு சிறு ஆய்வினை மேற்கொள்கிறோம். உன் குடும்பம் அரசாங்கத்தினால் பராமரிக்கப்படும். உணவு, உடை மேலும் அனைத்து வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும். நீ இருந்து செய்து தருவதைவிடவும் சிறப்பான வசதிகள் அவர்களுக்கு இப்போது அமைந்து விடும். உனக்கும் எல்லா வசதிகளும் முழுசாய் தரப்படும். ஆனால் நீ ஆறு மாத காலத்துக்கு தனிமையில் இருக்க வேண்டும்.”

அவன் ஒரு பெரிய வீட்டுக்குள் அடைக்கப்பட்டான். அவனுக்கு எல்லா வசதிளும் அளிக்கப்பட்டன - ஆனால் சூழல் மட்டும் முற்றிலும் தனிமையானது. அவனுக்குக் காவலாய் இருந்த ஆளுக்குக்கூட இவனுடைய மொழி தெரியாது. ஆகவே இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள முடியாது.

ஓரிரு நாட்கள்தான் கடந்தன. அவன் படபடப்பாய் உணர ஆரம்பித்தான். அவனுக்கு ஒவ்வொரு வசதிகளும் பார்த்துப் பார்த்து தரப்பட்டிருந்தன. அவனுக்கு எந்தக் குறையும் அங்கு கிடையாது. நேரத்துக்கு சாப்பாடு உண்டு. அவன் தேவைப்பட்ட நேரத்தில் தூங்கப் போய் விடலாம். அது அரசாங்க அரண்மனை ஆகையால் அவனுக்கு அங்கு இல்லாத வசதிகள் கிடையாது. கஷ்டங்களே இல்லை. உட்கார்ந்த இடத்திலிருந்தே என்னவெல்லாம் வேண்டுமோ அனைத்தையும் அவன் செய்து கொள்ளலாம். அப்படியொரு ராஜயோகம். என்ன ஒரேயொரு குறை என்றால், அவனால் வேறு ஒருவருடனும் பேச முடியாது, யாரையும் அவனால் சந்திக்க முடியாது.

ஓரிரு நாட்களுக்கு பின்பு அவன் சிக்கலாய் உணர ஆரம்பித்தான்.

இருப்புக் கொள்ளாமல் ஆனான். எட்டு நாட்கள் ஆனதும் வாய் விட்டே கத்த ஆரம்பித்து விட்டான்: "இங்கிருந்து என்னை வெளியே கொண்டு போய் விடுங்கள்! என்னால் இங்கு தங்கியிருக்க முடியாது!"

என்னதான் பிரச்சினை? எங்குதான் பிரச்சினை? - பிரச்சினை உள்ளிருந்து ததும்பி வெளிவர ஆரம்பித்துள்ளது. வெளியிலிருந்துதான் பிரச்சினைகள் உருவாக்கின்றன என நேற்றுவரை நினைத்திருந்தவன், இன்று, தன்னந்தனிமையில் இருக்கும்போது, அவை தனக்குள்ளேதான் உருவாக்கின்றன என்பதைக் கண்டு கொண்டான்.

ஆறே மாதங்களில் மனிதன் பைத்தியமாகிப் போனான். ஆறு மாதங்களுக்கு பிறகு அவன் வெளியே கொண்டு வரப்பட்டபோது அவன் முற்றிலும் மூளை சுவாதீனம் இழந்து பைத்தியமாகிப் போயிருந்தான்.

ஒரு கிணறு முழுதும் தண்ணீரால் நிரப்பப்பட்டுள்ளது. நிங்கள் ஒரு வாளியால் முகர்ந்தால், கிணற்றிலிருந்து அதில் நீர் வருகின்றது. கிணற்றில் தண்ணீர் இல்லை என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் எத்தனை முறைதான் வாளியை உள்ளே விட்டு கடுமையாய் இறைத்துக் கொண்டேயிருந்தாலும் அதில் ஒரு சொட்டு தண்ணீர்கூட வராது. தண்ணீரை வெளியே கொண்டுவர வாளிக்கென்று பிரத்யேகமாக வலு கிடையாது - இது நடைபெற முதலில் கிணற்றில் தண்ணீர் இருந்தாக வேண்டும். கிணற்றுக்குள் தண்ணீர் இருந்தால்தான் அதனை வாளி அள்ளி வெளியிலெடுக்கும். கிணற்றுக்குள் தண்ணீர் இல்லாவிட்டால், அதனை இறைத்தெடுக்க வாளியால் முடியாது.

உங்களுக்குள் கோபம் இல்லாவிட்டால், உங்களுக்குள் வெறுப்பு இல்லாவிட்டால், உலகிலுள்ள எந்தவொரு சக்தியாலும் உங்களுக்குள் கோபத்தையோ வெறுப்பையோ கொண்டுவர முடியாது. யாரும் கிணற்றுக்குள் வாளியைப் போடாமலே இருக்கும் காலகட்டத்தில், கிணற்றுக்குள் நீர் இல்லை என்ற பொய்த்தோற்றம் நிலவும். ஒருவர் அதற்குள் வாளியைப் போட்ட கணமே அதில் நீரை நிறைத்தெடுத்துவிட முடியும். ஆக கிணறு பயன்படுத்தப்படாமல் இருக்கும்பட்சத்தில், அதில் தண்ணீர் இல்லை எனத் தவறுதலாக நாம் நினைக்கும்படி ஆகிறது. இது தவறு. தப்பான அபிப்பிராயம்.

இதேபோல, யாரும் வாகாக நமக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்காத பட்சத்தில், நம்முள்ளிருந்து கோபமோ, வெறுப்போ, பொறாமையோ பொங்காது. ஆனால் உங்களுடைய கிணற்றில் தண்ணீரே இல்லை என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். தண்ணீர் கிணற்றுக்குள் உள்ளது. அது யாராவது ஒருவர் வாளியுடன் வந்து நீரை வெளியே இறைத்தெடுக்கக் காத்திருக்கின்றது. ஆனால் நாமோ இந்த இடைப்பட்ட காலகட்டத்தைப்போய், அன்புருவாக நாமிருக்கும் காலமாகவும், சாந்தமாய் நாம் உலவும் காலமாகவும் எடுத்துக் கொள்கிறோம். இந்நிலை மாறி உள்ளம் அமைதியடைய இறைவனிடம் பிரார்த்திப்போம்.

**காம உட்பகைவனும் கோப வெங்கொடியனும்**
**கனலோப முழுமூடனும்**
**கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட**
**கண்கெட்ட ஆங்காரியும்**
**ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்று**
**இயம்பு பாதகனுமாம் இவ்**
**வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்**
**எனைப் பற்றிடாமல் அருள்வாய்.**

அது ஒரு மழைக்காலம். ஒரு பெரியவர் சாலையில் பயணித்துக் கொண்டிருந்தார். அந்நேரம் பார்த்து மழை ஆரம்பித்துவிட்டது. அந்த பெரியவர் கையிலோ குடை இல்லை. எங்கு தேடியும் ஒதுங்குவதற்கு இடமும் இல்லை. தனக்கு சீதளமோ, காய்ச்சலோ வந்துவிடப்போகிறது என்ற பயம் அவரைத் தொற்றிக் கொண்டது.

இந்நிலையில் தூரத்தில் இரண்டு வேலையாட்கள் கட்டிலை சுமந்துகொண்டு நடந்து செல்வதைக் கண்டார். அவரது உயரம் அந்த கூலியாட்களை விடவும் குறைவாக இருந்ததால் ஓடிச்சென்று மரக்கட்டிலில் மத்தியில் நின்று கொண்டார். இப்போது அவரது தலையில் ஒருசொட்டு மழைத்துளிகூட விழாமல் பாதுகாப்பாகச் சென்றார். மேலும் அவரால் முடிந்த அளவிற்கு அந்த கூலியாட்களுக்கு உதவியும் செய்தார். இருப்பினும் கூலியாட்களை விடவும் அதிக பலன் இவருக்கே கிடைத்தது.

அனேக ஆன்மீக சாதகர்கள் தன்னையறியும் பாதையில் செல்லும்போது உலக மாயை என்ற மழையினால் கலங்கி வாடுகின்றனர். இதனின்று விடுபடுவதற்கு ஓர் உகந்த வழி தன்னை விடவும் ஆன்மீக சாதனையில் உயர்ந்த ஆத்மாக்களோடு இணைந்து செயல்படுவது ஒன்றே. இப்படிச் செய்வதால் ஒருவர் இதுபோன்ற உலகியல் மாயையினின்று எளிதாக விடுபடலாம்.

ஆன்மீக அனுபவத்தில் உயர்ந்த ஆத்மாக்கள் ஆன்மபலம் உள்ளவர்களாக, அருள் பலம் மிக்கவர்களாக இருப்பதால் அவர்களுக்கு கீழ் செல்லும் ஆரம்ப ஆத்ம சாதகர்கள் தேவையற்ற உலகியல் பிரச்சனையிலிருந்து விடுபடுவர்.

**சிவபரம்பொருளை அனுபவித்தற்கு முக்கியம் ஜீவகாருண்யம், பாசவைராகம், சிவபத்தி. இவை கிடைத்தற்கு முதற்கருவி சாதுக்கள் சார்வு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்புவேண்டும்.**

**ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும் - திருஅருட்பா**

**திருச்சிற்றம்பலம்**

# திருவடி இரகசியம்

அகரமும் உகரமும் அழியாச் சிகரமுமாய்' விளங்கும் திருவருள் நம் அகத்தே ஒளிந்து ஒடுங்கி உள்ளது. அதனைப் பெருவெளியாக்கி பேரொளியாகக் காணவேண்டும். இரு வகையில் இறைவனை நெருங்கலாம்; "நீயே என் தலைவன், நான் உனது அடிமை என்னை நீ ஏற்றுக்கொள்" என்ற வழியில் நெருங்குவது; உன்னைத் தவிர வேறு ஒரு பொருளும் இல்லை; தன் ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் வேற்றுமை ஏதும் இல்லை; தான் பிரம்மத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற உணர்வில் நெருங்குவது. நெருங்கினால்தான் காணமுடியும். காண வேண்டுவது மெய்ப்பொருள், 'அம்மெய்ப்பொருளே சிவம் என்றும் பிரம்மம் என்றும் அழைக்கப்படுகிறது. உள்ளது ஒரு பொருள்தான்; இஃது காலத்தால் மாறுபடாதது; ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்தில் மறைந்து விடாதது; ஓரிடத்தில் இருந்து பிறிதோரிடத்தில் இல்லாது போகாது; ஒரு காரணத்தால் தோன்றி அழியும் பொருளும் மெய்ப்பொருள் ஆகாது; காலதேச வர்த்தமானத்தால் மாறுபடாதது எதுவோ அதுவே மெய்ப்பொருள்'. இம்மெய்ப்பொருள் சத்து என்று அழைக்கப்படுகிறது. பேரின்பத்தின் உறைவிடம் அது என்பதால், 'ஆனந்தம் பிரம்மம்' என்கிறது உபநிடதம். ஆகவே மெய்ப்பொருள் 'அறிவுப்பெருவெளி' என்றும் சத் சித் ஆனந்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வுண்மையை நமது வள்ளல் பெருமகனார் தெள்ளத்தெளிவாய் அறிவுபூர்வமாக இவ்வாறு நமக்கு உணர்த்துகின்றார். நம் பெருமானாரின் திருவடிப் புகழ்ச்சி இது.

**'பரமசிவம் சின்மயம் பூரணம் சிவபோக**
**பாக்கியம் பரம நிதியம்**
**பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப்**
**பரம ஏகாந்த நிலயம்.'**

ஒளிவு மறைவு இல்லாமல் பேசுகின்றார். உள்ளதை உள்ளபடி அனுபவித்துப் பேசுகின்றார். பிரம்மம் என்று சமஸ்கிருதமொழியில் சொல்லப்படுவதுதான் 'சிவம்' என்பது. அந்த சிவம் முழுமையானது; அறிவுமயமானது; சிவபோக பாக்கியமாகிய மரணமில்லாப் பெருவாழ்வை அளிக்கும் பரம நிதியம் அது. தனிமையில் சுகம் காணக்கூடியது; ஏகாந்த நிலயம், தன் மயமானது; சத்து. அது சித்து அம்பரம் ஆகி சிதம்பரமாகவும், சித்து ஆகாசமாகி சிதாகாசமாகவும் ஆகின்றது; திருவடிப் புகழ்ச்சியில் இரண்டியிலேயே எத்தகைய விரிவை சுருக்கி விவரமாக விளங்க வைத்துள்ளார். அது காலங்கடந்து நிற்கும் மெய் இயல்புடையது என்பதை மேலும் விளக்குகின்றார்.

**ஞாலமே ஞாலமெலாம் விளங்கவைத்த**
**நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற**
**காலமே காலமெலாம் கடந்த ஞானக்**
**கதியே மெய்க் கதியளிக்குங் கடவுளே சிற்**
**கோலமே குணமேஉட் குறியே கோலம்**
**குணங்குறிகள் கடந்துநின்ற குருவே அன்பர்**
**சீலமே மாலறியா மனத்திற் கண்ட**
**செம்பொருளே உம்பர்பதஞ் செழிக்கும் தேவே – மகாதேவமாலை 29**

இவ்வண்ணம் நூறு பாடல்களில் வீறுகொண்டு இறைவனை போற்றிப் புகழ்வதும், உருகி உணர்ந்து ஏற்றி ஒருமையுடன் வழிபடுவதும், நாடுவதற்கான முயற்சியும் பயிற்சியும் பற்றற்ற வைராக்கியமும் அதி தீவிர இறை நாட்டமுடன் வீடுபேற்றினை அடைவதற்கான வழிமுறைகளைக் கூறியுள்ள பாங்கும், அதற்கான பக்குவமும் வேறெந்த நூல்களிலும் காணமுடியாது. கடவுளின் மெய் இயல்புகளை எண்ணி எண்ணி வியத்தற்கும், உணர்ந்து நெகிழ்ந்து மகிழ்ந்து வணங்குவதற்கும் மெய்வழிகாட்டி பேரின்ப பெருநிலையின் மெய் இன்பத்தையும் ஊட்டி, பெருவழிக்கு நம்மை அழைக்கிறது இம் மகாதேவமாலை பாக்கள். முத்து என்பது சிப்பியில் மழைநீர் உறுத்தலால் உருவாவது; பத்தி என்பதும் இறைவன் உணர்வு என்னும் உறுத்தலால் உருவாகி முத்தி தருவது, சித்தி பெறுவது.

சதம் என்றால் முழுமை பெற்ற நூறு என்றும். நிலையானது என்றும் பொருள் தரும். எனவேதான் மகாதேவ மாலையில் நூறு பாக்களை புணைந்தாரோ நம் பெருமானார் என எண்ணத் தோன்றுகிறது. ஈண்டு பட்டினத்தார் எவை எவை சதம் அல்ல என்பதை பட்டியலிட்டு, எது சதமானது எனவும் தொட்டுக் காட்டுகின்றார்.

**ஊரும் சதம் அல்ல உற்றார் சதம் அல்ல உற்றுப் பெற்ற**
**பேரும் சதம் அல்ல பெண்டீர் சதம் அல்ல பிள்ளைகளும்**
**சீரும் சதம் அல்ல செல்வம் சதம் அல்ல தேசத் திலே**
**யாரும் சதம் அல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம் பனே.**

ஊரும், பெற்றபேரும், பெண்டிரும், பிள்ளையும் யாரும் சதம் இல்லை. நின்தாள் ஒன்றே சதம் என்கிறார். திருவடிகள் மட்டுமே நிலையானவை என்கிறார்.

இறைவனின் திருவடிகள் எங்கே இருக்கிறது?

சில கோயில்களில் உருவகமாக இரண்டு திருவடிகள் அமைத்து வழிபடுகிறோம். வணங்குகின்றோம். இவை உண்மையில் திருவடிகள் ஆகிவிடுமா? உருவ வழிபாடும் இதே நிலைதான். இவ்வுருவங்களை வழிபடுவதால் இறைவனை வழிபட்டதாகவோ அவர்தம் திருவடிகளை வணங்கியதாகவோ ஆகிவிடாது. நம் வழிபாடு உண்மையாக வேண்டுமானால்

உண்மையில் திருவடி இருக்கும் இடத்தைத் தேடிக்காண வேண்டும். திருவடியைக் கண்டவர்கள் வழிகாட்டினால் அவ்வழியில் சென்றும் தேடலாம்.

அந்த வகையில் நம் வள்ளல் பெருமானாரே இறைவனின் திருவடி எங்கே இருக்கிறதென்று திருஅருட்பாவில் இயம்பியுள்ளார்கள்.

**தடையுறாப் பிரமன் விஷ்ணு ருத்திரன்**
**மயேச்சுரன் சதாசிவன் விந்து**
**நடையுறாப் பிரமம் உயர் பராசத்தி**
**நவில் பரசவம் எனும் இவர்கள்**
**இடையுறாத் திருச்சிற்றம்பலத்து ஆடும்**
**இடதுகால் கடைவிரல் நகத்தின்**
**கடையுறு துகள் என்று அறிந்தனன் அதன்மேல்**
**கண்டனன் திருவடி நிலையே – திருவடி நிலை; திருஅருட்பா**

இவ்விதம் நவநிலைகளைக் கடந்து நிற்கும் திருவடியை எவ்விதம் பற்றுவது என்பது குறித்து நம் வள்ளல் பெருமானார் திருஅருட்பாவில் இயம்புகிறார்.

**பற்றை அறுப்பது ஓர்பற்றினைப் பற்றில்அப்**
**பற்றை அறுப்பர் என்று உந்தீபற**
**பாவிக்க வாரார் என்று உந்தீபற – திருஉந்தியார்**

இறைவன் திருவடியை பற்றவதென்பது கற்பனையாக நினைப்பதால் ஆகாது. உலகப் பற்றினை விடுவதால் மட்டுமே கிட்டும். இதையே உண்மை நெறிவிளக்கத்தில் உமாபதிசிவம் என்பவர்

**‘பரைஉயிரில் யான்எனது ஒன்று அறநின்றது அடியாம்**
**பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றல் அதுமுகமாம்**
**உரைஇறந்த சுகம்அதுவே முடியாகும் என்றுஇவ்**
**உண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறு ஒன்றுஇன்றி’**

என மிகத் தெளிவாக விளக்குகின்றார்.

இதேபோல் நமது வள்ளல் பெருமானாரால் போற்றப்பட்ட குமரகுருபரர், திருஅடியோடு முடியையும் காட்டுகின்றார்; கையைக் காட்டுகின்றார்; கண்ணைக்காட்டி முகத்தைக்காட்டுகின்றார்; இருக்கும் சந்நிதியைக் காட்டுகின்றார்.

**‘யான்எனதுஎன்று அற்ற இடமே திருவடியா**
**மோனபரா னந்த முடியாக – ஞானம்**
**திருவுருவா இச்சை செயல்அறிவு கண்ணா**
**அருளதுவே செங்கை அலரா – இந்நிலமே**
**சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்**
**பின்னமற நின்ற பெருமானே!’**

யான் என்ற உடல்பற்றும், எனது என்ற பொருளாசை, போகத்தில் ஆசை இல்லாத இடம் திருவடி இருக்கும் இடம். மெய்ஞ்ஞானம் பெற்றவரின் உண்மை வெளிப்பாடு; அடிமுடியோடு இறைவனின் கண்களும், கைகளோடு இறைவடிவமும் அவன் இருக்கும் சந்நிதியையும் அறிவு பூர்வமாக அறிவித்திருக்கிறார். எவ்வுயிர்க்கும் பின்னமற நிற்கும் பெருமானே என்கிறார். யான் எனது என்று பற்று அற்ற இடமே திருவடியாம். திருவள்ளுவ தேவரும்,

**யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும். 346**

என்று துறவு அதிகாரத்தில் சுட்டிக்காட்டுகின்றார். யான் என்ற உடற்பற்றும், எனது என்கின்ற புவன போகங்களாகிய பற்றும் அறுக்க வேண்டும் என்கிறார். நமது வள்ளல் பெருமானாரும்

**தனுகரணாதிகள் தாம்கடந்தறியும் ஓர்**
**அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி** என்கிறார்.

தனு என்பது உடல், கரணாதிகள் என்பதை அந்தக் கரணங்கள் நான்கையும் சொல்லலாம்; உடல் தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்றும் கொள்ளலாம். இவற்றைக் கடந்து சென்றால் திருவடிகளைக் கண்டு தரிசிக்கலாம். இன்னும் பெருமானார், இறைவன் ‘தன்னைக் காட்டாமல்’ காட்டும் இடத்தைக் காட்டுகின்றார்.

**வான் காணா மறைகாணா மலரோன் காணான்**
**மால் காணான் உருத்திரனும் மதித்துக் காணான்**
**நான் காணா இடத்ததனைக் காண்பேம் என்று**
**நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை**
**மாண்காணா உளக்கமல மலர்த்தா நின்ற**
**வான்சுடரே ஆனந்த மயமே ஈன்ற**
**ஆன்காணா இளங்கன்றாய் அலமந் தேங்கும்**
**அன்பர்தமைக் கலந்துகொளும் அமலத் தேவே.– மகாதேவமாலை 49**

தனிச்சுடரே என்றார் குமரகுருபரர்; நம்பெருமானாரோ வான்சுடரே என்கின்றார். யான் எனது அற்ற இடம் திருவடி என்றார் குமரகுருபரர். நம் பெருமானார் இதனை, ‘நான் காணா இடத்துஅதனைக் காண்பேம்’ என்றும், தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் அனுபவம் என்றும் விளக்கியுள்ளார்கள். திருவடி இருக்கும் இடம் இதுதான் என்று தெளிவாகத் தெரிகிறது. அதனை அடைவதற்கான வழிகளைத்தான் வேதங்களும் மதங்களும், சமயங்களும் சந்நிதானங்களும் சித்தர்களும் முத்தர்களும் கூறியுள்ளனர். ஆயிரம் மதங்கள், ஆயிரம் வழிகள் காட்டுகின்றன. திறக்கும் வழியா அல்லது அடைபட்ட வழியா என்பது அடியவர் தேர்ந்தெடுக்கும் வழியைப் பொறுத்தது. **வொறித்த மத**

**சமயமெல்லாம் பொய் பொய்யே** என்று திருஅருட்பாவில் வள்ளல் பெருமான் சத்தியம் செய்துவிட்டதால் மறந்தும் அந்தப் பாதையில் செல்ல வேண்டாம். பாதை தேய்ந்து செம்மையாய்த் தெரிவதுபோல் சடங்குகளும், சம்பிரதாயங்களும் இருபுறமும் அணிவகுத்து அழகாய் வரவேற்கின்றன. இதற்குக் காரணம் எல்லாரும் ஏமார்ந்து அந்தப் பாதையில்தான் போய்க் கொண்டிருக்கின்றனர். தொடக்கம் சரியாக இருக்கிறது. முடிவுதான் சரியில்லை. பெண்வயிற்றில் பிறந்து மண்வயிற்றில் போவதற்கா மானிடப் பிறப்பு? மண்மேல் பிறந்தோம். மண்ணுக்கு உள்ளே போகக்கூடாது.

'யான் எனது' என்ற பற்று அற்ற இடம் திருவடி என்றால், அதனை மானசீகமாக மனோ தவ ஆற்றலால் மட்டுமே பற்ற முடியும்; முயன்று தவம் செய்து அடியைப் பற்றிக் கொண்டால் மௌனம் என்ற முடிவுக்குக் கொண்டு சேர்த்துவிடும்.

இறைவனை அடைய வேண்டும்; இறைநிலை அறியவேண்டும் என்ற இறை நாட்டமுள்ள சாதகன் ஒருவன் செல்லும் பாதையை செப்பனிட்டு, முன்னேற்றும் பாதையைத்தான் ஆய்வு செய்ய வேண்டும். இப்பாதையில் சில பேய்கள் நடமாடுகின்றன என்று எச்சரிக்கையூட்டுகிறார். **'யான் என்கின்ற ஆணவப்பேயும், எனது என்கிற இராட்சதப்பேயும், மாயை என்கிற வஞ்சகப்பேயும், பெண்ணாசை என்கிறப் பெரும்பேயும், மண்ணாசை என்கிற மானிடப் பேயும், பொன்னாசை என்கிற பொல்லாப் பேயும், குரோதம் என்கின்ற கொள்ளிவாய்ப்பேயும், உலோபம் என்கின்ற உதவாப்பேயும், மோகம் என்கின்ற மூடப்பேயும், மதம் என்கின்ற வலக்காரப்பேயும், மாச்சரியம் என்கின்ற மலட்டுப்பேயும், மனப்பேயாடு கூடி இரவும் பகலும் ஆட்டுகின்றன' என்று 'மனுமுறை கண்ட வாசகத்தில்' நமது வள்ளல் பெருமானார் பேய்களைப் பட்டியலிட்டு காட்டி அவற்ற விரட்டி அடிக்கச் சொல்கிறார்.** ஒரு பேயை விரட்டுவதே இயலாத காரியம்; ஈண்டு பன்னிரண்டு பேய்களை விரட்ட வேண்டும். அதனால்தான் பன்னிரண்டு ஆண்டுகள் சாதனை செய்ய வேண்டியுள்ளதோ! இப்பன்னிரண்டுப் பேய்களையும், ஐந்து பேரறிவு; நான்கு அந்தக் கரணங்கள், மூன்று குணங்கள் ஆகிய பன்னிருவரையும் ஒருநிலைக்குக் கொண்டு சென்று நேர் நிறுத்தினால் பன்னிரண்டென்ன பன்னீராயிரம் பேய்களும் அக்கணப் பொழுதில் இருக்குமிடம் தெரியாமல் மறைந்தே போய்விடும். இதுதான் இறுதியாக எடுக்க வேண்டிய ஆன்ம லாபத்தை எட்டுவதற்கான கூட்டு முயற்சி. முயன்று பயின்று வைராக்கியத்துடன் ஒரு நிலைப்படுத்தி வெற்றி கொள்வோம்.

**மாயையால் வினையால் அரிபிரமாதி வானவர் மனமதி மயங்கித்**
**தீயகாரியங்கள் செய்திடில் அந்தோ சிறியனேன் செய்வது புதிதோ**
**ஆயினும் தீய இவைஎன அறியேன் அறிவித்துத் திருத்துதல் அன்றி**
**நீயிவண் பிறர்போன்று இருப்பது தந்தை நெறிக்குஅழகு அல்லவே எந்தாய்**

**– திருஅருட்பா**

*திருச்சிற்றம்பலம்*

## திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய

# தெய்வத் தீந்தமிழாம் திருஅருட்பா

அன்பு உள்ளங்களே!

மாற்றம் ஒன்றை மட்டுமே நிலையாகக் கொண்டது இவ்வுலகம். இந்த நிலையற்ற வாழ்வை நிலையென நம்பி நாம் வாழ்வதால்தான் நமக்கு துன்பம் வருகின்றது. எனவே துன்பத்திலிருந்து விடுபட வேண்டுமானால் “பொய்யினின்று மெய்க்கு என்னை அழைத்துச் செல். இருளினின்று ஒளிக்கு என்னை அழைத்துச் செல். அழிவினின்று சாகாநிலைக்கு என்னை அழைத்துச் செல்” என்றுதான் நாம் முறையிட வேண்டும். அங்ஙனம் வேண்டும் முறையை திருஅருட்பாவில் வள்ளல் பெருமானார் தெளிவாக அருளியுள்ளார்கள். இதனை நாள்தோறும் ஓதி சுகம் பெறுவோமாக!

தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும்
புனித நீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப்பா இனி ஆற்றேன். 1

தந்தைநீ அலையோ தனையன்நான் அலனோ
தமியனேன் தளர்ந்து உளம் கலங்கி
எந்தையே குருவே இறைவனே முறையோ
என்றுநின்று ஓலிடு கின்றேன்
சிந்தையே அறியார் போன்றிருந் தனையேல்
சிறியனேன் என்செய்கேன் ஐயோ
சந்தையே புகுந்த நாயினில் கடையேன்
தளர்ச்சியை தவிர்ப்பவர் யாரே. 2

கண்ணே கண்மணியே கருத்தே கருத்தின் கணிவே
விண்ணே விண்ணிறைவே சிவமே தனி மெய்ப்பொருளே
தண்ணோர் ஒண்மதியே எனைத் தந்த தயாநிதியே
உண்ணோர் உள்ளொளியே எனக்கு உண்மை உரைத்தருளே. 3

Advertisement


மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus
( Free )

OS
( Licenced )




i5
i3 Processor i7
C2D




பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

BeyondexC Network Solutions
பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம் 981**
**இருள்நெறி எனஎனக்கு இயம்பிய சிவமே 982**

அருள்நெறி - கருணை நெறி
ஒன்றே - ஒன்றுமட்டுமே
தெருள்நெறி - தெளிவான நெறி
மற்றெலாம் - மற்றநெறிகள் எல்லாம்
இருள்நெறி - இருட்டு நெறிகள்,
இருண்ட நெறிகள் - மயக்கநெறிகள்
என - என்று
எனக்கு - எனக்கு
இயம்பியசிவமே - கூறிய சிவபரம்பொருளே

அருளோடு ஒருபுடை ஒப்பது தெருள். தெருள் - தெளிவு. அருளுக்கு மாறானது இருள் - இருட்டு, மயக்கம்.

அருள்நெறி ஒன்று மட்டுமே தெளிவான ஒளிநெறி. மற்ற நெறிகளெல்லாம் இருண்ட மயக்க நெறிகளே என்று வள்ளற்பெருமானுக்குச் சிவபரம்பொருள் இயம்பிற்று.

வள்ளள் பெருமானாருக்கு இறைவன் விளக்கியருளியது அருள் நெறியாகிய ஒளிநெறி. அருள்நெறி இன்னதென்று இயம்பிய சிவம் மற்றவையெல்லாம் இருள்நெறி என்றும் இயம்பிற்று. மன்பதையெல்லாம் இருள்நெறி நீங்கி, அருள் நெறி அடைவதற்கென்றே வந்துற்றவர் வள்ளலார்.

**பதிநிலை பசுநிலை பாச நிலையெலாம் 1045**
**மதியுறத் தெரிந்துள் வயங்குசற் குருவே 1046**

**பதி, பசு, பாசம்** என்னும் மூன்றும் **முப்பொருள்** எனச் சைவ சித்தாந்தத்தில் கூறப்பெறும்.

பதி - இறைவன்
பசு - உயிர்கள், ஆன்மாக்கள்
பாசம் - கட்டு, தளை

பாசம் பந்திக்கும், கட்டும், பந்தபாசம் என்னும் வழக்கைக் காண்க. எல்லோர்க்கும் எளிதில் விளங்கக் கூறுவதானால் உலக ஆசாபாசங்கள் எனலாம்.

பதியிடம் இல்லாதது பாசம். பசுக்களிடம் உள்ளது பாசம். பாசம் நீங்கப்பெற்றால் பசு, பதியைச் சேரலாம், பசுபதியாகலாம்.

**பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**

**பதியினைப் போல்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்று அணுகாப்பசு பாசம்**
**பதிஅணுகில் பசு பாசம் நிலாவே**

என்னும் திருமந்திரமும்,

சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம் பொருள்
மூன்றுள; மறைஎலாம் மொழிய நின்றன;
ஆன்றதோர் தொல்**பதி; ஆருயிர்**த் தொகை;
வான்திகழ் **தளை**என வகுப்பர் அன்னவே.

என்னும் கந்தபுராணப் பாடலும் (காசிபன் உபதேசப்படலம் 3ஆம் பாடல்) முப்பொருளையும் அவற்றின் இயல்பையும் கூறுவன.

| | | |
|---|---|---|
| பதிநிலை | - | பதியாகிய இறைவனின் நிலை இறைவனின் இயல்பு |
| பசுநிலை | - | பசுக்களாகிய ஆன்மாக்களின் (உயிர்களின் நிலை), உயிர்களின் இயல்பு |
| பாசநிலை | - | பாசமாகிய கட்டின் நிலை; இயல்பு |
| எலாம் | - | இவை எல்லாவற்றையும் |
| மதியுறத்தெரிந்து | - | அறிவுறத் தெரிவித்து |
| உள்வயங்கு சற்குருவே | - | எனக்குள்ளே விளங்கும் சற்குருவாம் அருட்பெருஞ்ஜோதியே! |

**பதிசார வைத்துமுற் பசுநிலை காட்டிப்**
**பாச விமோசனப் பக்குவன் ஆக்கி**
**நிதிசார நான்இந்த நீள்உலகத்தே**
**நினைத்தன நினைத்தன நேருறப் புரிந்து**
**திதிசேர மன்னுயிர்க்கு இன்பஞ் செய்கின்ற**
**சித்தி எலாந்தந்து சுத்த கலாந்த**
**அதிகார வீதியில் ஆடச்செய்தீரே**
**அருட்பெருஞ்ஜோதிஎன் ஆண்டவர் நீரே 4652**

என்னும் திருவருட்பாப் பாடல் அருட்பெருங்ஜோதி ஆண்டவர் வள்ளள் பெருமானுக்குப் பசுநிலையைக் காட்டி, பாசவிமோசனப் பக்குவன் ஆக்கி, பதிசாரவைத்த திறத்தைக் கூறுவது.

மேல்வரும் ஆறு அடிகளில் பிரமரகசியம், பரமரகசியம், சிவரகசியம் என்னும் ரகசியப் பொருள்களைத் தெரிவித்தமை கூறப்பெறுகிறது. ஞானமார்க்கத்தில் வேதாந்த சித்தாந்தங்களில் மறைபொருள்கள் பல உண்டு. வள்ளற் பெருமானைப் பொருத்தவரை ரகசியங்களெல்லாம் ரகசியங்களாக இல்லை, வெளிப்படையாகத் தெரிந்தன.

ஐந்துமாதக் குழந்தைப் பருவத்தில் தில்லைத் தலத்திடையே திரை தூக்கத் தரிசித்தபோது சிதம்பர ரகசியமே வெளிப்படையாகத் தெரிந்தது என்றால் ஏனைய ரகசியங்களெல்லாம் வெட்ட வெளியாவதில் வியப்பென்னை?

# உள்ளது உரைத்தல் பேருபதேசம்

**ஸ்ரீமுக வருஷம், ஐப்பசி மாதம், 7ஆம் நாள், புதவாரம், பகல் 8 மணிக்கு, மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதன் முதலில் கொடி கட்டினவுடனே நடந்த நிகழ்ச்சியின் குறிப்பு.**

இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம்கேட்டிருப்போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத் தருணமே. ஆதலால் இத்தருணம் இக்காலமே சன்மார்க்கக் காலம்.

இதற்குச் சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக் கொண்டது. அக்கொடி இப்போதுதான் நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி இருக்கின்றது. அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச் சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக்கொடி நம்அனுபவத்தின்கண் விளங்கும். இவ்அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளி முகத்தில் அடையாள வர்ணமாக கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரரில்லைகொடி கட்டிக் கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிகின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது நான் சொல்லிவந்த பிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மையறிவாய் விசாரம் செய்துகொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்தத் தயவு வருவதற்கு ஏதுவான உரிமையும் கூட இருக்க வேண்டும். இப்படி இருந்து கொண்டிருந்தால் ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக் கொள்வீர்கள். இது சத்தியம், சத்தியம், சத்தியம். இஃது ஆண்டவர் கட்டளை.

எல்லோர்க்கும் தாய், தந்தை, அண்ணன், தம்பி, முதலான ஆப்தர்கள் செய்யபட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம். இஃது ஆண்டவர் கட்டளை.

## பாடலும் பொருளும்

### திருஅருட்பா எனும் மாமறை

**மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த**
**வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்**
**பொய்யுணர்ந்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்**
**புரிந்தருளும் கருணைவெள்ளப் பொற்பே அன்பர்**
**கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்**
**கரைந்துகரைந்து உருகவவர் கருத்தி னூடே**
**உய்யுநெறி யொளிகாட்டி வெளியு முள்ளும்**
**ஓங்குகின்ற சுயஞ்சுடரே யுண்மைத் தேவே – மகாதேவமாலை (52)**

திருவாதவூரர் குருந்த மரத்தடியில் ஞானோபதேசம் பெற்றதாக அவரது வரலாறு கூறுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டுதான் மெய்யுணர்ந்த வாதவூரர் என்றார். செத்தே போனால் சிறியாரோ என்று மரணமிலாப் பெருவாழ்வை வேண்டும் வாதவூரர் என்னையும் இருப்பதாக்கினன் என்கிறார். நமது பெருமானார் வாதவூரரும் முத்தேக சித்தி பெற்றதாகத் தமது திரு அருட்பாவில் குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசகர் உட்பட நால்வரும் மனிதரல்லர் தத்துவமே என்ற வள்ளலாரின் வாசகம் ஒரு பக்கம் இருக்க இந்துப் பாடலைப் பொறுத்தவரை அவரை ஒரு மலையாகவே குறிப்பிடுகின்றார்.

**மன்புருவ நடுமுதலா மனம் புதைத்து நெடுங்காலம் என் புருவாய்த் தவம் செய்வார் எல்லாரும் ஏமாக்க அன்புருவம் பெற்றதன் பின் அருளுருவம் அடைந்து இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூரிறையே (திரு அருட்பா)**

இறைவனுக்கு எந்த உருவத்தையும் கற்பிக்காத வள்ளற் பெருந்தகை இறைவனை வெளியே என்கிறார். வாதவூரரையும் தன்னைப்போல் வெளியாக்கித் தன்னுடன் கலந்து கொண்டானாம் இறைவன். மெய்யுணர்ந்தவர் வாதவூரர் - எனக்கும் என்னைப் போன்றே பொய்யே உணர்ந்த மற்றவர்கட்கும் இன்பமே புரிகின்ற கருணை வெள்ளமே உன் செயல் என்றும் அழகுடையதே.

“சாதி, மதம், சமயம், இனம், மொழி முதலிய எந்த வேறுபாடுகளும் இல்லாது எல்லா மக்களும் ஒன்றுபட்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும்” என்று போதித்தவர் வள்ளலார். ஆனால் அவரே மாமிசம் உண்போரைப் புறவினத்தார் என்றும் புலால் உண்ணாதவரை அகவினத்தார் என்றும் பிரித்தார். வள்ளலார் சங்கம் - சாலை - சபை என்ற முன்று நிலையங்களை ஏற்படுத்தினார். சங்கத்திற்கு அனைவரும் வரலாம் - அகவினத்தார் மட்டுமே சாலைக்கு உரியவராவார் - அகவினத்தாரை

அகப்பணி செய்வோர் என்றும் புறப்பணி செய்வோர் என்றும் இரண்டாகப் பிரிக்கின்றார். அகப்பணி செய்வோரை அன்பர் என்று திரு அருட்பாவில் குறிப்பிடுகின்றார். (ஆறாம் திருமுறை - அனுபவமாலை - பாடல் 19) அன்பர்கள் தவம் செய்து இறைவனாகிய அருட்பெருஞ்ஜோதியை அனுபவமாக உள்ளே காண முயற்சிப்பவர்கள். தவம் செய்யும் அன்பர்களின் உள்ளங்கை நெல்லிக் கனியாக விலகாமல் உயர்ந்து நிற்பவனே என்று இறைவனைப் புகழ்கிறார். எங்கே மெய்யன்பர் உளார், அங்கே நலந்தர எழுந்தருளும் வண்மைப்பதம் என்பது வள்ளலார் வாக்கு - வள்ளலார் தவம்புரிந்தார்.

நானே தவம் புரிந்தேன் என்றும் நான் செய்த தவம் யார் புரிந்தோர் என்றும் பலப்பல பாக்களில் வள்ளலார் கூறியுள்ளார். அருட்பெருஞ்ஜோதி என்ற அனுபவத்தை அவர் அடைந்தார்.

யாருடைய உள்ளமானது தயவினால், இரக்கத்தால், பக்தியால் கரைந்து உருகுகின்றதோ அவர்கள் கருத்திலே மேன்மையடைந்து உய்யக் கூடிய வழிகளைக் காட்டுகின்றான் இறைவன்.

என்னை ஏறாநிலைமிசை ஏற்றி விட்டது யாதெனில் தயவுதான் என்பார் வள்ளலார். இரக்கம் ஒருவில் என் உயிரும் ஒருவும் என்றார். ஞான சரியையில் முதற்பாட்டிலேயே நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து எனப்பாடுவார். யாருடைய உள்ளமானது கரைந்து கரைந்து உருகுகின்றதோ அவர் கருத்தினூடே உய்யும் நெறி காட்டுவதுடன் ஒளியையும் காட்டுவார் என்கிறார். அத்துடன் நில்லாது அந்த இறைவன் உள்ளும் வெளியும் ஓங்குகின்ற சுயஞ்சுடராக விளங்குகின்றானாம். ஒரு விளக்கை ஏற்றினால் காணப்படுவது சுடர். அருட்பெருஞ்ஜோதி தவம் செய்வோர் அகத்தே தானாகத் தோன்றுவதால் சுயஞ்சுடரே எனப்பட்டது. மனமானது செயல்படாத நிலையில் பரநாத நிலை அனுபவத்தில் தோற்றமாவதே பெருஞ்ஜோதி. அதுதான் அருள். அதைத்தான் அருட்பெருஞ்ஜோதி என்றார் வள்ளலார்.ஆறாம் திருமுறையில் அனுபவ மாலையில் ஈற்றியேன் எனத் தொடங்கும் 54வது பாடலில் விளக்கப்படும் அதுதான் உண்மைக் கடவுள். மகாதேவ மாலையில் இங்கு விளக்கப்பட்டதும் அதே உண்மைக்

திருச்சிற்றம்பலம்

வருவார்
அழைத்துவாடி
வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம்
நல்ல வரமே
- வள்ளலார்.

**மாதப்பூச ஜோதி தரிசனம், வடலூர்**

| | | |
|---|---|---|
| 25-09-2016 | ஞாயிறு | மாதப்பூசம் |
| 05-10-2016 | புதன் | வள்ளலார் வருகை |
| 23-10-2016 | ஞாயிறு | மாதப்பூசம் |

## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

<u>ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை</u>

காலை உணவிற்கு - ரூ.2,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-

இரவு உணவிற்கு - ரூ.3,500/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-

பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,500/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

<u>Please donate - Cheque / DD In favour of</u>

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

<u>Please donate through:</u> **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**<u>Please send MO to:</u>**

அருள்திரு பாபு சாது

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:- **8012680865, 7502026565**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அ த னா ல் தா ன் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

**பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்**
**கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**



## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

– சன்மார்க்க மாதஇதழ்

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற "வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு" மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள்

ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் சந்தாதாரராக்கி அறிவு தானம் செய்து பயனடையுங்கள். தொடர்புக்கு: **8012680865**

**ஆண்டு சந்தா ரூ.120/-** **5 வருட சந்தா ரூ.600/-**

Follow us on:

www.vallalarmission.org www.fasebook.com/vallalarmission
vallalartrust@gmail.com Group name: vallalarmission Cell no.:9942776351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly September 2016, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).


## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# மாதாந்திர கூட்டுப்பிரார்த்தனை

பாட்டால் உனது பதத்தை நாடிப் பாடும் வாயரே
பதியே இந்த உலகில் எனக்கு மிகவும் நேயரே
நாட்டார் எனினும் நின்னை உளத்து நாட்டார் ஆயிலோ
நயவேன் சிறிதும் நயத்தல் கயக்கும் எட்டிக் காயலோ — திருஅருட்பா 1830

**நாள்:** செப்டம்பர் 25 ஞாயிற்றுக் கிழமை

**இடம் :** வள்ளலார் சத்திய யோகசாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

### நிகழ்ச்சி நிரல்

- அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- ஜோதி தியானம்
- அன்னதானம்



தொடர்புக்கு: 96009 80270, 94434 89849.


திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 97896 02258